بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:7 ரபீஉல் ஆகிர், 1430, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## அர்ஷின் கீழ் நிழல் பெறும் அந்த ஏழு கூட்டத்தினர்

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

அல்லாஹ்வின் நிழலைத்தவிர வேறு எந்த நிழலுமே இல்லாத நாளில் அல்லாஹ் ஏழு கூட்டத்தாருக்கு மட்டும் அர்ஷின் நிழலில் நிழல் கொடுப்பான். நீதியான அரசன், அல்லாஹ்வின் வணக்கத்தில் திளைத்த (ஊரி திளைத்த) வாலிபன், பள்ளியோடு உள்ளம் தொடர்புள்ள மனிதன், இருவர் அல்லாஹ்விற்காக நேசித்து ஒன்றிணைந்து அல்லாஹ்விற்காகவே பிரிந்தவர்கள், நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அழகி ஒருவரை விபச்சாரத்திற்காக அழைத்தும் நான் அல்லாஹ்வை பயப்படுகின்றேன் என்று கூறிய(ஒதுங்கிக் கொண்ட) வர், வலது கரம் கொடுக்கும் தர்மத்தை இடது கரத்திற்கு தெரியாமல் மறைமுகமாக தர்மம் கொடுத்தவர், தனிமையில் இருந்து அல்லாஹ்வை நினைத்து (அழுது) கண்களால் கண்ணீர் வடித்தவர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

புகாரி, முஸ்லிம்

குறிப்பு: மேல் கூறப்பட்ட தன்மையுள்ளவர்கள் ஈமானில் முழுமை அடைந்தவர்களால் மாத்திரமே முடியும், ஆகவே நாமும் அப்பண்புள்ளவர்களாக வாழ முயற்சிப்போமாக.

### மஹ்ஷர் வெளியின் அகோரம்

மஹ்ஷர் வெளியென்பது கேள்வி கணக்கு கேட்கப்படும் நாளாகும். அங்கே சூரியன் மனிதர்களுக்கு ஒரு மயில் தூரத்தில் நெருங்கியிருக்கும், மனிதர்கள் ஆடையில்லாதவர்களாக, செருப்பில்லாதவர்களாக, அவரவர் செய்த பாவத்திற்கிணங்க,வேர்வையில் மூழ்கியவர்களாக இருப்பார்கள். சிலருக்கு கரண்டைக் கால் வரையும், சிலரக்கு முட்டுக்கால் வரையும், சிலருக்கு இடுப்பவரையும், சிலருக்கு வாய்வரையும் வந்துவிடும். அந்த நேரத்தில் நான்கு கேள்விகளுக்கு விடை சொல்லாதவரை தான் நிற்கும் இடத்திலிருந்து ஒரு அடி எடுத்து வைக்கமுடியாது. ஒவ்வொருவரும் தன்னைப்பற்றியே சிந்திக்கும் நாளாகும் அது. அந்த நாளில்தான் அல்லாஹ் தனது அர்ஷின் நிழலில் மேல்கூறப்பட்ட ஏழு பண்புள்ள மக்களை அமரவைப்பான். அல்லாஹ் நம்மையும் அந்த கூட்டத்தில் சேர்த்து வைப்பானாக!

பின்வரும் ஹதீதுகள் அதை தெளிவு படுத்துகின்றது,

சூரியன் மனிதர்களுக்கு ஒரு மயில் அளவு நெருங்கி விடும், மனிதர்கள் செய்த தவறளவுக்கு வேர்வை அவர்களை அடைந்துவிடும், சிலருக்கு அவர்களின் கரண்டை அளவுக்கும், சிலருக்கு அவர்களின் முட்டுக்கால் வரையிலும், சிலருக்கு அவர்களின் இடுப்புவரையிலும், சிலருக்கு வாய்வரையிலும் வந்துவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

பூமியில் எழுபது முழம் செல்லும் அளவு மறுமையில் மனிதர்களுக்கு வேர்வை ஏற்படும்,

*தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க ...*

## உள்ளே!

நரகம் (பாகம்-2) - 4

இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 6

Excel-ன் பயன்களை தெரிந்து கொள்வோம் - 9

மறுமை - 11

மீன்கள் - 11

இறை நினைவுகள் - 12

அறிவுப் போட்டி - 12

## மூதாதையர்கள் ஓர் முன்மாதிரியா ???

*- அபூ ரம்லா*

அல்லாஹ் இறக்கிய (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என அவர்களுக்கு கூறப்பட்டால், (அதற்கு) அவர்கள் அவ்வாறல்ல! எங்கள் மூதாதையரை எதன் மீதிருக்க நாங்கள் கண்டோமோ, அதனையே நாங்கள் பின்பற்றுவோம்" என்று கூறுகின்றனர்; அவர்(களின் மூதாதையர்)களை ஷைத்தான் கொழுந்து விட்டெரியும் வேதனையின்பால் அழைத்தாலுமா (அவர்களைப் பின்பற்றுவார்கள்)? (அல்-குர்ஆன் 31: 21)

"அல்லாஹ் இறக்கியருளிய (வேதத்)தின்பாலும், இத்தூதரின்பாலும் வாருங்கள்" என அவர்களுக்குக் கூறப்பட்டால், "எங்களுடைய தந்தையர் (மூதாதையர்) களை நாங்கள் எ(ந்த மார்க்கத்)தில் கண்டோமோ அதுவே எங்களுக்குப் போதுமானது" என்று அவர்கள் கூறுகிறார்கள்; என்ன! அவர்களுடைய தந்தையர் (மூதாதையர்கள்) ஒன்றும் அறியாதவர்களாகவும், நேர்வழியில் நடக்காதவர்களாகவும் இருந்தாலுமா? (அவர்களைப் பின்பற்றுவார்கள்.) (அல்-குர்ஆன் 5: 104)

மேற்கூறப்பட்ட இரு குர்ஆன் வசனங்களிலும் அல்லாஹ்வின் வேதத்தில் குறிப்பிட்டபடி பின்பற்றுங்கள் என்று ஏறத்தாழ 1430 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்த மக்கத்து மக்களுக்கு மத்தியில்

குறிப்பிட்டபொழுது, அன்றைய காலத்தில் வாழ்ந்த மக்கள்...

தான் பரம்பரையாக மற்றும் மூதாதையர்கள் செய்துவந்த செயல்களான லாத், உஸ்ஸா போன்ற சிலைகளை கடவுள்களாக நம்பி வணங்கி வந்தவர்கள், ஒவ்வொரு குறிப்பிட்ட தேவைக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட கடவுள்களை அழைத்து தன் தேவையை முறையிட்டு அதன் மூலம் தான் பெற்றுக் கொள்வதாக நம்பிக்கை கொண்டவர்கள், அம்பெய்தி குறிபார்த்து வந்தவர்கள், மது, வட்டி, விபச்சாரம் போன்ற மற்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாயிருந்தவர்கள் இன்னும் பற்பல செயல்களில் ஈடுபட்டவர்கள் கூறியது போன்று இன்று முஸ்லிம்களாக இருக்கக்கூடிய நம் சமுதாய மக்களும் குறிப்பாக தமிழகம் மற்றும் இலங்கையில் வசிக்கக்கூடியவர்களில் பலர் மார்க்கம் அனுமதிக்காத பல்வேறு செயல்களுக்கும் முன்னோர்களையே உதாரணம் காட்டி செய்து வருவதை நாம் கண்கூடாக பார்க்கின்றோம்.

இவற்றில் ஒருசிலவற்றை பட்டியலிட்டு காட்டினால் நாம் யாரை பின்பற்றுகிறோம் என்பதை நாமே தீர்மானித்துக் கொள்ள முடியும்.

### சந்தனக்கூடும் உருஸூம்...

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், 'என்னுடைய கப்ரை விழா நடத்தும் இடமாக ஆக்கிவிடாதீர்கள்' என்று எச்சரித்தார்கள் அறிவிப்பாளர் அபூஹுரைரா(ரலி) அவர்கள்.

யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் சபிப்பானாக அவர்கள் தங்கள் நபிமார்களின் கப்ருகளை வணக்கஸ்தலங்களாக மாற்றி விட்டனர் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிவிப்பாளர் அபூஹுரைரா(ரலி) அவர்கள்.

நபிமார்களின் கப்ருகளை வணக்கஸ்தலங்களாக மாற்றிய இரண்டு பெரும் சமுதாயத்தை அல்லாஹ் சபிக்கின்றான் என்றால் நம் சமுதாயத்தில் அவ்லியாக்களின் கல்லறைகளை வணங்கக்கூடிய (நேர்ச்சை, பிரார்த்தனை செய்வது, அறுத்து பலியிடுவது, உதவிக்கு அழைப்பது போன்ற அனைத்தும்) அனைவரையும் அல்லாஹ் சபிக்கிறான் என்பதை இந்த ஹதீஸ் மூலம் தெளிவாக விளங்கி கொள்ள முடிகிறது.

### மௌலிது ஓதுதல்...

இவற்றில் பல்வேறு வகைகள் உள்ளது குறிப்பாக சுப்ஹான மௌலிது பிரபல்யமானது அதாவது ரபிஉல்அவ்வல் மாதம் வீடுவீடாக, தெருத்தெருவாக மற்றும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் நபி(ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடும் விதமாக மௌலிது ஓதி சீரணியோ அல்லது சாப்பாடோ பங்கிட்டு விட்டால் நாம் நபி(ஸல்) அவர்களை கண்ணியப்படுத்திவிட்டோம் என்று பெருமிதம் கொண்டு தன்னுடைய வழமையான செயல்களை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் இந்த பெயர்தாங்கி இஸ்லாமியர்கள்.

### மீலாது விழா...

இவற்றை பற்றி விரிவாக எடுத்துக் கூற அவசியமில்லை காரணம் அரசாங்கமே விடுமுறையை அறிவித்து பற்பல மேடைகளில் அரசியல் தலைவர்களும், இஸ்லாமிய தலைவர்களும்(?) ஒன்றோடொன்டு கலந்து மீலாது விழா கொண்டாட்டங்கள்? அரசியல் இலாபத்திற்காக வருடாந்தோறும் நிறைவேற்றப்படுகிறது.

### முஹர்ரம் மாதத்தில் பஞ்சாவெடுப்பதும் துக்கம் அனுஷ்டிப்பதும்...

முஹர்ரம் மாதம் ஆஷுரா நாளில் (பிறை 9 மற்றும் 10 அன்று) நோன்பு நோற்பது சுன்னத்தாகும், மாறாக அன்றைய நாட்களில் ஹுசைன்(ரலி) அவர்கள் கர்பலாவில் கொல்லப்பட்டார்கள் என்பதற்காக இன்றுவரை ஒவ்வொரு வருடமும் துக்க அனுஷ்டிப்பதும், தன் உடலை வருத்திக் கொள்வதும் எந்தவிதத்தில் நியாயம்.

### ஒடுக்கத்து புதன் அல்லது ஸபர் கழிவு....

ஸபர் மாதம் முழுவதும் பீடை மாதம் என்று கருதி நல்ல நிகழ்ச்சிகள் எதுவும் நடத்தாமல் பிற்படுத்தி செய்வது மார்க்கத்தில் குறிப்பிடப்படாத ஒன்றாகும்.

### ரஜப் மாத பூரியான் பாத்திஹா...

அனைவரையும் அழைத்து பாத்திஹா ஓதி பாயசம் சகிதம் பூரியான்களை வழங்கிவிட்டால் பணக்காரர் ஆகிவிடலாம் என்றெண்ணி ஒவ்வொரு வருடம் ரஜப் மாதமும் பூரியான் வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்கின்றவர்களில் ஒருவராவது இந்த செயலின் காரணமாக பணக்காரர் ஆகினாரா என்பதை சிந்தித்துக்கூட பார்க்கவில்லை.

### தாயத்தும் தகடும்....

என்னவென்றே புரியாத அரபி எழுத்துக்களையும் எண்களையும் எழுதி அதனை கை, கழுத்து, இடுப்பு, வீட்டின் மூலை, நிலைகதவு, பின்கொல்லை கதவு என்று எங்கு பார்த்தாலும் தொங்கவிட்டால் தனக்கும் தன் குடும்பத்திற்கும் எந்த ஆபத்தும் அணுகாது என்பது மடமையின் உச்சம்.

### செய்வினை செய்தல்...

நோயின் அறிகுறிகளையோ நோய் நிவாரணிகளையோ கொண்டு, நோய் நீக்க முயற்சிக்காமல், செய்வினை செய்துள்ளார்கள் அதிலும் குறிப்பாக இன்ன இரத்த பந்தத்திலுள்ளவர்கள்தான் செய்துள்ளார்கள் என்று ஏதோ தனக்கு ஞானம் இருப்பதாக கருதி அல்லாஹ்விற்கு இணையாக மற்றவர்களின் வாழ்க்கையில் விளையாடுபவர்களை இஸ்லாம் கடுமையாக கண்டிக்கின்றது.

### ஜோதிடம் பார்ப்பது...

பாளாய்போன பால்கிதாபு என்று ஒன்று எழுதி வைத்துள்ளார்கள், யாருக்காவது ஏதாவது நிகழ்ந்துவிட்டால் அல்லது எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை அறிய உடனே பால்கிதாபை எடுத்து ஒருசில வரிகளை படித்துவிட்டு இப்படி இப்படி என்று கூறிவிடுபவருக்கு பணமும் பொருளும் கொடுத்து அனுப்பிவிட்டு கூறியது எல்லாம் நடக்கும் என்று நம்புவது எவ்வளவு மடமை என்பதை விளங்கிகொள்ள வேண்டும்.

### குறிசொல்வது...

எவர் குறி சொல்பவரிடம் சென்று அவர் சொல்வதை உண்மையென நம்புகிறாரோ அவருடைய 40 நாட்கள் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட

மாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள். (முஸ்லிம்)

### பேய் மற்றும் பிசாசு....

பேயும் இல்லை பிசாசும் இல்லையென்று இஸ்லாம் தெளிவாக கூறிவிட்டாலும் தற்கொலை செய்து கொண்டவர்கள், குடும்பத்தின் தலைபிள்ளை, கன்னியாக உள்ளவர்கள் இறந்துவிட்டால் இவர்களெல்லாம் இறந்தபின் ஆவியாக, பேயாக, பிசாசாக சுற்றுவார்கள் என்று தானும் பயந்து தன் பிள்ளைகளையும் பயமுறுத்தி சிறுபிள்ளைகள் முதலே பயத்துடன் வளர காரணமாகிறார்கள்.

### வீடு கட்டுவதில் தொடங்கி குடிபுகுதல்...

மனையடி சாத்திரம் தெரிந்தவர்கள் என்று கருதி ஒருசிலரிடம் சென்று தன்னுடைய மனையின் அளவை குறிப்பிட்டு அவர் எவ்வாறெல்லாம் கூறுகின்றரோ அவ்வாறே, தான் வாழப்போகும் வீட்டினை அமைப்பது. உதாரணமாக தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் 8*8 அடியில் சமையலறை அமைத்தால் வசதியாக இருக்கும் என்றிருந்தால் அதனை அவர் 4*4 அடியில் கட்டினால்தான் இன்ன இன்ன தோஷங்கள் உங்களை அணுகாது அல்லது நல்லது நடக்கும் என்று கூறிவிட்டால் போதும் 4*4 அடிக்கு மேல் 1 இஞ்ச் கூட்டவோ அல்லது குறைக்கவோ கூடாது என்று அடம்பிடித்து வீடு கட்டுவதிலும் நம் சமுதாய மக்களின் எண்ணிக்கை குறையவில்லை.

வாசற்படி அமைத்தல், நிலை கதவு அமைத்தலுக்கும் சாஸ்தர சம்பிதராயங்களை காரணங்காட்டி வீட்டின் சொந்தக்காரருக்கு உள்ள அனைத்து உரிமைகளையும் பறித்தெடுத்து மற்றவர்களின் கலாச்சாரங்களை புகுத்திவிடுகின்றனர்.

### திருமணத்தில் அனாச்சாரங்கள்...

பந்தலில் முகூர்த்த கால் ஊன்றுதல்

பந்தலின் முகப்பின் இரு ஓரங்களிலும் வாழைமரத்தை நடுதல்

மஞ்சல் மற்றும் தாலி கயிற்றிற்கு இணையாக கருகமணி போன்றவற்றை தங்கத்துடன் சேர்த்து கழுத்தில் கட்டுதல்

ஆட்டுத் தலையுடன்கூடிய அரிசியை கொண்டு ஆரத்தி எடுத்தல்

வரதட்தனை வாங்குதல் போன்றன

### பெயர் சூட்டுவிழா...

குழந்தை பிறந்த 40வது நாள் என்று கணக்கிட்டு அந்த நாளில் விருந்திற்கு ஏற்பாடு செய்து மௌலிதும் ஏகப்பட்ட பாத்திஹாக்களும் ஓதி பெயர் சூட்டினால் தான்! இஸ்லாமிய குழந்தையாக வளரும் என்ற நிம்மதி

### சுன்னத் கல்யாணம் மற்றும் மலர்மாலை சூட்டுவிழா...

ஆண் குழந்தைகளுக்கு கத்னா செய்வதை சுன்னத் கல்யாணம்? என்றழைத்து தடால்புடால் என ஊரை கூட்டி விருந்து வைபோகம் செய்துவிட்டால் தான் பெற்றெடுத்த ஆண் குழந்தை(கள்) சுன்னத்தை முழுமையாக நிறைவேற்றி விட்டதாக பெருமிதம் அடைந்து கொள்கிறார்கள்.

### பூப்பெய்த விழா...

பெண் குழந்தைகள் அதனதன் வயதில் பருவம் அடைவது அல்லாஹ் இந்த ஆதமுடைய மக்களுக்கு வழங்கிய ஒரு அருட்கொடை, அதனை மற்றவர்களுக்கு அறிவிக்கும் வகையில் விருந்துடன் (விருந்தில்லாமல் எதுவுமில்லை) பூப்பெய்த விழா நடத்துகின்றார்கள். இது வெட்கக்கேடான ஒன்றாகும் என்பதைக்கூட நமது சமுதாயத்தவர்கள் விளங்காமல் இருக்கின்றனர்.

### புது கணக்கு மற்றும் ஆயூத பூஜை தினம்...

வருடாவருடம் ஏதாவதொரு மாதத்தின் ஆரம்ப தினத்தில் புது கணக்கு தொடங்குகிறோம் என்று பாத்திஹா ஓதி தொடங்கப்படுகின்ற வியாபார முறை மார்க்கத்தில் அனுமதிக்கப்படாத ஒன்றாகும் மேலும், வருடந்தோறும் ஆயூத பூஜை என்று வியாபார நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து பொருட்களையும் சுத்தம் செய்து பாத்திஹா அல்லது பூஜை சகிதம் செய்துவிட்டால் பரக்கத் கிடைக்கும், வியாபாரம் பெருகும் என்ற நம்பிக்கை நம் சமுதாய மக்களிடம் உள்ளது என்பதை மறுக்க இயலாது.

இவைகள் அல்லாமல் இன்னும் எத்தனையோ செயல்களை அன்றாடம் நம் சமுதாய மக்கள் முன்னோர்களின் வழிமுறைகளை பின்பற்றுகிறோம் என்று கூறி செயல்படுத்தி வருகின்றனர் ஆனால் இவ்வாறு செய்யக்கூடியவர்கள் அனைவரும் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள் என்று அல்லாஹ் கீழ்கண்ட வசனத்தில் தெளிவாக குறிப்பிடுகின்றான்

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஒரு காரியத்தைப்பற்றிக் கட்டளையிட்டு விட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் வேறு அபிப்பிராயம் கொள்வதற்கு ஈமான் கொண்டுள்ள எந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உரிமையில்லை ஆகவே, அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் எவரேனும் மாறு செய்தால் நிச்சயமாக அவர்கள் பகிரங்மான வழிகேட்டிலேயே இருக்கிறார்கள். (அல்-குர்ஆன் 33: 36)

ஆனால், உண்மையான முறையில் இஸ்லாத்தை ஏற்ற சத்திய ஸஹாபாக்களில் சிலர் இத்தயை மூடபழக்கங்களில் மூதாதயர்களை காரணம் காட்டி ஈடுபட்டவர்கள்தான், ஆனால் நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைபடி இது மார்க்கத்திற்கு தவறானதும் தண்டனை பெற்றுத்தரக்கூடிய செயல் என்றதும் அதனை தூக்கி எறிந்தார்கள், முன்னோர்களை காரணம் காட்டி அதனை தொடர்ந்தும் செய்யவில்லை. சத்தியம் என்று தெரிந்த பிறகு அசத்தியத்தை தூக்கியெறிந்து விட்டார்கள், மாறாக இரட்டை வேடம் போட்டுக் கொண்டிருந்த முனாபிக்குகளும், முற்றிலும் இஸ்லாத்தை வெறுத்த அல்லது ஏற்றுக் கொள்ளாமலிருந்த காபிர்கள் மாத்திரம் தான் செய்வது சரியென்று முன்னோர்களை காரணம் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஸஹாபாக்கள் எவ்வாறு சத்தியம் வந்தபின்பு அசத்தியத்தை தூக்கியெறிந்து அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைந்துக் கொண்டார்களோ அதேபோன்று நாமும் நடந்து அல்லாஹ்வின் பொருத்தத்தை பெற்றுக் கொள்ள அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக!

# நரகம் (பாகம் -2)

(அல்லாஹ், நம் அனைவரையும் நரகத்திலிருந்து பாதுகாத்தருள்வானக!)

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## நரகத்தில் நிரந்தரம்

நிச்சயமாக, குற்றவாளிகள் நரக வேதனையில் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்களுக்கு அ(வ்வேதனையான)து குறைக்கப்பட மாட்டாது, அதில் அவர்கள் நம்பிக்கையையும் இழந்து விடுவார்கள். எனினும், நாம் அவர்களுக்கு யாதோர் அநியாயமும் செய்யவில்லை; ஆனால் அவர்கள் தமக்குத் தாமே அநியாயம் செய்து கொண்டவர்களே. மேலும், அவர்கள் (நரகத்தில்) "யா மாலிக்" உமது இறைவன் எங்களை முடித்து விடட்டுமே!" என்று சப்தமிடுவார்கள்; அதற்கு அவர் "நிச்சயமாக நீங்கள் (இங்கு) நிலைத்து இருக்க வேண்டியவர்களே" என்று கூறுவார். 43:(74-77)

நிச்சயமாக வேதக்காரர்களிலும் முஷ்ரிக்குகளிலும் எவர்கள் நிராகரிக்கிறார்களோ அவர்கள் நரக நெருப்பில் இருப்பார்கள் - அதில் என்றென்றும் இருப்பார்கள் - இத்தகையவர்கள்தாம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள் ஆவார்கள். 98:6

நிராகரித்து அல்லாஹ்வின் பாதையிலிருந்து (மனிதர்களை) தடுத்து கொண்டு இருக்கிறார்களே நிச்சயமாக அவர்கள் வழி கேட்டில் வெகு தூரம் வழி கெட்டுச் சென்று விட்டார்கள்.

நிச்சயமாக (இவ்வாறு) நிராகரித்து, அக்கிரமம் செய்பவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பளிக்க மாட்டான்; அன்றி அவர்களை நேர் வழியிலும் செலுத்த மாட்டான். நரகத்தின் வழியைத் தவிர - அதில் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள்; இது அல்லாஹ்வுக்கு சுலபமாக இருக்கிறது. 4:167,169

"அல்லாஹ்விடமிருந்து (வருவதை) எடுத்துச் சொல்வதும், அவனுடைய தூதுவத்துவத்தையும் தவிர (எனக்கு வேறில்லை) எனவே, எவர் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்கிறாரோ அவருக்கு நிச்சயமாக நரக நெருப்புத்தான். அதில் அவர் என்றென்றும் இருப்பர்" என் (நபியே!) நீர் கூறும். 72:23

யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம்; அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை, அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென, அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான். 4:56

"என்னுடைய வசனங்கள் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படவில்லையா? அப்போது நீங்கள் அவற்றைப் பொய்ப்பிக்கலானீர்கள்" (என்று கூறப்படும்) "எங்கள் இறைவனே! எங்களை எங்களுடைய துர்பாக்கியம் மிகைத்துவிட்டது; நாங்கள் வழிதவறிய கூட்டத்தினர் ஆகிவிட்டோம்" என்று அவர்கள் கூறுவார்கள்.

"எங்கள் இறைவனே! நீ எங்களை இ(ந் நரகத்)தை விட்டு வெளியேற்றுவாயாக திரும்பவும் (நாங்கள் பாவம் செய்ய) முற்பட்டால் நிச்சயமாக நாங்கள் அநியாயக்காரர்கள்!" (என்றும் கூறுவர்.)(அதற்கவன்) "அதிலேயே இழிந்து கிடங்கள்; என்னுடன் பேசாதீர்கள்!" என்று கூறுவான். 23:(105-108)

## நரகத்தின் ஆழம்

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் (ஒரு சபையில்) இருந்தோம், அப்போது திடீரெண்டு பாரிய சத்தத்துடன் ஒரு பொருள் விழுந்ததின் சத்தத்தை கேட்டோம், இது என்ன சத்தம் என்பது உங்களுக்கு தெரியுமா? என நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் கேட்டார்கள், அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிவார்கள் என நாங்கள் கூறினோம். அது, எழுபது ஆண்டு காலமாக அல்லாஹ் நரகத்தில் வீசிய ஒரு கல்லாகும், இப்போதுதான் நரகத்தின் அடித்தழத்தை சேந்திருக்கின்றது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

உத்பா இப்னு கஸ்வான் (ரலி) அவர்கள் குத்பா பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது (மக்களுக்கு கூறினார்கள்) எங்களுக்கு கூறப்பட்டது, நரகத்தில் வீசப்பட்ட அந்தக்கல்லு, நரகத்தின் ஓரத்திலிருந்து வீசப்பட்டது. அது நரகத்தின் அடியை சேர்வதற்கு எழுபது ஆண்டுகள் பிடித்திருக்கின்றது, அல்லாஹ்வின் மீது ஆணையாக அதில் நீங்கள் நிரப்பப்படுவீர்கள், என்ன, நீங்கள் ஆச்சரியப்படுகின்றீர்களா? எனக் கேட்டார்கள். (முஸ்லிம்)

## நரக கள்ளி மரம்

(நரகத்திலுள்ள) கள்ளிமரத்தின் ஒரு துளி, இந்த உலகத்தில் விழுந்தால், இவ்வுலகிலுள்ளவர்களின் வாழ்க்கையை கெடுத்துவிடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி, திர்மிதி, இப்னு மாஜா)

## உலக செல்வந்தனும் ஏழையும்

(நாளை மறுமையில்) உலகத்தில் மிகவும் அருட்கொடைகளுடன் வாழ்ந்த ஒரு நரகவாதியை கொண்டு வரப்பட்டு, அவனை நரகத்தில் ஒரு முறை மூழ்கி எடுக்கப்படும், பின்பு அவனிடத்தில், ஆதமுடைய மகனே! (உலகத்தில்) ஏதாவது நலவை கண்டாயா? ஏதாவது நலவை அனுபவித்தாயா? என்று கேட்கப்படும். அதற்கு அவன், அல்லாஹ்வின் மீது ஆணையாக, இல்லை இறைவா, எனக்கூறுவான். (நாளை மறுமையில்) உலகத்தில் மிகவும் வறுமையில் வாழ்ந்த ஒரு மனிதனை கொண்டு வரப்பட்டு, அவனை சுவர்க்கத்தில் ஒரு முறை மூழ்கி எடுக்கப்படும், பின்பு அவனிடத்தில், ஆதமுடைய மகனே! (உலகத்தில்) ஏதாவது கஷ்டத்தை கண்டாயா? ஏதாவது கஷ்டத்தை அனுபவித்தாயா? என்று கேட்கப்படும். அதற்கு அவன், அல்லாஹ்வின் மீது ஆணையாக, இல்லை இறைவா, எனக்கூறுவான். (முஸ்லிம்)

## நரக நெருப்பிலிருந்து விடுதலை பெற, எதை கொடுக்கவும் தயார்

நாளை மறுமையில் நரகவாதிகளிலிருந்து ஒருவரை கொண்டு வரப்பட்டு, இந்த பூமியிலுள்ளவைகள் உனக்காக இருந்து (நரகத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்காக) அதை நீ அற்பணமாக கொடுப்பாயா? என்று கேட்கப்படும், அதற்கு அவன்

ஆம் எனக்கூறுவான். அப்போது அல்லாஹ் கூறுவான், நான் உன்னிடமிருந்து அதைவிட இலகுவானதையே விரும்பினேன். நீ ஆதமுடைய முதுகம் தண்டில் இருக்கும் போது, எனக்கு கொஞ்சம் கூட இணைவைக்கக்கூடாது என உன்னிடம் உறுதி மொழி எடுத்தேன், நீயோ, அதை மறுத்து எனக்கு இணைவைக்கக்கூடியவனாகவே இருந்தாய் என அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

## நரகத்திலிருந்து பாதுகாப்பு

நபி(ஸல்) அவர்கள் நரகத்தை பற்றிக்கூறி அதிலிருந்து பாதுகாப்புத் தேடி தன் முகத்தை திருப்பிக் கொண்டார்கள், மீண்டும் நபி(ஸல்) அவர்கள் நரகத்தை பற்றிக்கூறி அதிலிருந்து பாதுகாப்புத் தேடி தன் முகத்தை திருப்பிக் கொண்டார்கள், .......பின்பு கூறினார்கள், பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டைக் கொண்டாவது நரகத்தை பயந்து கொள்ளுங்கள் அதற்கு முடியாவிட்டால் நல்ல வார்த்தையைக் கொண்டாவது (அந்த நரகத்தை பயந்து கொள்ளுங்கள்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

பேரீத்தம் பழத்தின் ஒரு துண்டைக் கொண்டாவது நரகத்தை பயந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

## சுவர்க்கம் செல்லாத மூன்று துற்பாக்கியவான்கள்

மூவர் சுவர்க்கத்தினுள் நுழையமாட்டார்கள், 1. தொடர்ந்து மது அருந்துபவன், 2. இரத்த உறவை துண்டித்து நடப்பவன், 3. சூனியத்தை உண்மை படுத்துபவன், தொடர்ந்தும் போதை அருந்தியவனாக யார் மரணிக்கின்றானோ, அவனுக்கு அல்லாஹ் கவ்தா என்னும் ஆற்றிலிருக்கும் (அசுத்தத்தை) புகட்டுவான். கவ்தா ஆறு என்பது என்ன? என்று கேட்கப்பட்டது. விபச்சாரிகளின் அபத்திலிருந்து ஓடும் (அசுத்தமாகும்) விபச்சாரிகளின் அபத்திலிருந்து வரும் துர்நாற்றம் நரகவாசிகளுக்கு வேதனை கொடுக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

## போதைப் பொருளை உட்கொள்பவர்களுக்கு கிடைக்கும் தண்டனை

(இவ்வுலகில்) போதைப் பொருளை அருந்துபவருக்கு தீனத்துல் கபாலை (மறுமையில்) அருந்த வைப்பது அல்லாஹ்வின் கடமையாகும், தீனத்துல் கபால் என்றால் என்ன? அல்லாஹ்வின் தூதரே! என (நபித்தோழர்கள்) கேட்டார்கள். நரகவாதிகளின் வேர்வை, அல்லது நரகவாதிகளின் ஊனம் என்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

சூரிய கிரகணம் ஏற்பட்டு, அதற்காக நபி (ஸல்) அவர்கள் தொழுகை நடத்தினார்கள், பின்பு கூறினார்கள், எனக்கு நரகம் காட்டப்பட்டது, இன்றைய நாளின் அவலத்தைப் போல் நான் என்றும் பார்த்ததில்லை என கூறினார்கள். (புகாரி)

## நரகத்தில் பெண்களின் எண்ணிக்கையே அதிகம் !

(ஒரு நீளமான ஹதீதில்...... நபி (ஸல்) அவர்கள் சூரிய கிரகணத் தொழுகையை முடித்த பின், அங்கிருந்த நபித்தோழர்கள்) அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் தொழுமிடத்தில் ஏதோ ஒரு பொருளை பிடித்தது போன்று நாங்கள் பார்த்தோம் பின்பு (அவ்விடத்திலிருந்து) பின் வந்ததையும் நாங்கள் பார்த்தோம் என்றார்கள், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், நான் சுவர்க்கத்தை பார்த்தேன், (அங்கிருந்து) திராட்சைப் பழக்குலையை பிடித்தேன், அதை நான் எடுத்திருந்தால் இவ்வுலகம் இருக்கும் வரை நீங்கள் அதை உண்ணக்கூடியவர்களாக இருந்திருப்பீர்கள், இன்னும் நரகத்தையும் காட்டப்பட்டேன், அன்றைய நாளின் அவலத்தைப் போல் நான் என்றும் பார்த்ததில்லை, அதில் அதிகம் பெண்கள் இருப்பதைக் கண்டேன், அல்லாஹ்வின் தூதரே! (அது) எதனால் என்றார்கள், அவர்கள் நிராகரிப்பதின் காரணமாக என்றார்கள், அல்லாஹ்வையா நிராகரிக்கின்றார்கள்? என கேட்கப்பட்டது, கணவனை நிராகரிக்கின்றார்கள், அவர்களுக்கு செய்யப்படும் உபகாரத்தை நிராகரிக்கின்றார்கள், அந்தப்பெண்களின் ஒருத்திக்கு காலம் முழுக்க உபகாரம் செய்து, பின்பு உங்களில் ஒரு தவறை அவள் கண்டுகொண்டால், நான் உன்னிடத்தில் எந்த நலவையும் கண்டதில்லை என்று கூறிவிடுவாள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

சுவர்க்கத்தை நோட்டமிட்டேன், அதில் அதிகமானவர்களை ஏழைகளாக பார்த்தேன், இன்னும் நரகத்தை நோட்டமிட்டேன், அதில் அதிகமானவர்களை பெண்களாக பார்த்தேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

நோன்புப் பெருநாள் அல்லது ஹஜ்ஜுப் பெருநாளில் நபி(ஸல்) அவர்கள் தொழுமிடத்துக்கு வெளியாகிச் சென்றார்கள், (தொழுகையை முடித்துவிட்டு) திரும்பி மக்களுக்கு உபதேசம் செய்தார்கள். தருமம் செய்யும்படி அவர்களுக்கு ஏவினார்கள், கூறினார்கள், மனிதர்களே! தர்மம் செய்யுங்கள், பெண்களின் பக்கமும் சென்றார்கள், பெண்கள் கூட்டமே! தர்மம் செய்யுங்கள், உங்களை நரகவாதிகளில் அதிகமாகவர்களாக நிச்சயமாக நான் பார்த்தேன் என்றார்கள், எதனால் அது அல்லாஹ்வின் தூதரே! என (அங்கிருந்த) பெண்கள் கேட்டனர், அதற்கு நபி (ஸல்) அவர்கள், நீங்கள் அதிகம் சாபம் இடுகின்றீர்கள், கணவர்மாரின் உபகாரத்தை மறுக்கின்றீர்கள், அறிவிலும் மார்க்கத்திலும் குறைவுள்ள உங்களைவிட மிகவும் அறிவுள்ள ஒரு ஆணிண் சிந்தனையை போக்கக்கூடியவர்களாக வேறு யாரையும் நான் பார்க்கவில்லை என்றார்கள்.... (புகாரி)

## மிருகத்தின் மீது இரக்கம் காட்டாதவர்களுக்கு கிடைக்கும் தண்டனை

பசியால் சாகும் வரை ஒரு பூனையை அடைத்து வைத்திருந்த பெண் ஒருத்தி (நரகத்தில்) வேதனை செய்யப்பட்டு நரகத்தினுள் நுழைந்தாள், நீ அந்த பூனையை அடைத்து வைத்திருந்த போது தண்ணீர் புகட்டவுமில்லை, உணவு கொடுக்கவுமில்லை, இன்னும் அதை விட்டுவிடவுமில்லை, (அப்படி அதை அவிழ்த்து) விட்டடிருந்தால் அது பூமியிலுள்ள புழுப்பூச்சிக்களை உண்டிருக்கும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

## கடும் சூடும் கடும் குளிரும் நரகத்திலிருந்தே!

நரகம் அல்லாஹ்விடத்திலே முறையிட்டது, என் இறைவா! என்னில் சிலது என்னை சாப்பிட்டு விட்டது, அப்போது அல்லாஹ் இரு மூச்சி விடுவதற்கு அனுமதித்தான். ஒரு மூச்சு குளிர் காலத்திலும், மற்ற மூச்சு கோடை காலத்திலாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

## சுவர்க்கமும் நரகமும் தற்கித்துக் கொண்டது

சுவர்க்கமும் நரகமும் தற்கித்துக் கொண்டது, நரகம் கூறியது, அடக்கி ஆழ்பவர்களும்

பெருமையடித்தவர்களைக் கொண்டு நான் தனிமைப்படுத்தப்பட்டுள்ளேன். சுவர்க்கம் கூறியது, பலஹீனர்களும், மனிதர்களால் மதிக்கப்படாதவர்களும், இயலாவாளிகளுமே என்னிடம் நுழைவார்கள். அல்லாஹ் சுவர்க்கத்திற்கு கூறினான், நீ என்னுடைய அருட்கொடையாகும், என் அடியார்களில் நான் நாடியவர்களை உன்னைக் கொண்டு அருள்புரிவேன். அல்லாஹ் நரகத்திற்கு கூறினான், நீ என்னுடைய தண்டனையாகும், என் அடியார்களில் நான் நாடியவர்களை உன்னைக் கொண்டு தண்டிப்பேன். உங்களில் ஒவ்வொருவரையும் அவர்களைக் கொண்டு நிரப்புவேன். நரகமோ நிரம்பாது, அப்போது அல்லாஹ் தன் கால் பாதத்தை நரகத்தின் மீது வைப்பான், அப்போது அது போதும் போதும் எனக்கூறும், அதில் சிலது சிலதுடன் சேர்ந்து விடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

### சுவர்க்கத்தில் அதிகமானவர்கள் ஏழைகள்

நான் சுவர்க்கத்தை நோட்டமிட்டேன், அதில் அதிகமானவர்களை ஏழைகளாக கண்டேன், இன்னும் நரகத்தை நோட்டமிட்டேன் அதில் அதிகமானவர்களை பெண்களாக கண்டேன் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

### செயல்படாத அழைப்பாளருக்கு மறுமையில் கொடூர தண்டனை

நாளை மறுமையில் ஒரு மனிதனை கொண்டு வரப்பட்டு, நரகத்தில் வீசப்படும், அவனுடைய குடல் நரகத்தில் வெளியாகி, திருகையை சுத்தும் கழுதையைப் போன்று அவன் சுத்துவான். நரகவாதிகள் அவனிடம் ஒன்று சேர்ந்து, ஓ மனிதனே! உனக்கு என்ன நேர்ந்தது? நீ எங்களுக்கு நன்மையை ஏவி தீமையை தடுக்கக்கூடியவனாக இருக்கவில்லையா? (என கேட்பார்கள்) அதற்கு அவன் கூறுவான், நான் உங்களுக்கு நன்மையை ஏவக்கூடியவனாக இருந்தேன், (ஆனால்) அதை நான் செய்யமாட்டேன், தீமையை விட்டும் உங்களை தடுக்கக்கூடியவனாக இருந்தேன், (ஆனால்) அதை நான் செய்வேன் என அவன் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

அல்லாஹ் நம் அனைவரையும் கொடிய நரகத்தின் தீங்கிலிருந்து பாதுகாப்பானாக!

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 7)

*- டாக்டர் ஷேக் சையது M.D.*

முன் தொடர்களில் விந்துவின் தன்மைகள் குறித்தும், அது எங்கு, எவ்வாறு, உற்பத்தியாகி எவ்வாறு வெளிப்படுகிறது என்பது குறித்தும் பார்த்தோம். இந்த விந்து சம்பந்தப்பட்ட இன்னொரு மிக முக்கியமான தகவலையும் இந்த இடத்தில் பார்த்துக் கொள்வது மிகப்பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதாவது பாலை (Sex) தீர்மானிப்பதற்கும் விந்துவில் உள்ள உயிரணுதான் காரணமாக இருக்கிறது என்று இன்றைய மருத்துவ அறிஞர்கள் ஆதாரத்துடன் நிருபித்துள்ளார்கள். இந்த தகவலை குர்ஆன் 1430 ஆண்டுகளுக்கு முன்பே கூறி இருப்பதுடன், இந்த பாலை தீர்மானிப்பதற்கு பெண்ணை எந்த விதத்திலும் காரணமாக ஆக்க முடியாது என்ற தகவலையும் சேர்த்துச் சொல்வது குர்ஆனின் அற்புதமாக உள்ளது. அறிவியல் தகவலையும், குர்ஆன் கூறும் உண்மைகளையும் பார்ப்பதற்கு முன்பு ஆண், பெண் குழந்தை உருவாகுவது குறித்து அன்றும் இன்றும் என்ன கருத்து இந்த சமுதாய மக்களிடையே நிலவிவருகிறது என்று சற்று அலசுவோம்.

### பெண்ணுக்கு உயிருடன் சமாதி கட்டிய அநியாயம்.

குழந்தை ஆணாக அல்லது பெண்ணாக பிறப்பதற்கு பெண்தான் காரணம் என்ற கருத்து அன்று முதல் இன்றுவரை பாமர மக்களிடையே நம்பப்பட்டு வருகிறது. படித்த மருத்துவ அறிஞர்களிடமும் இந்த மூட நம்பிக்கை ஆழமாக வேரூன்றிருப்பது வேடிக்கையாகும். அதனால் அன்றும் இன்றும் ஆண் குழந்தை பெற்றுத்தராத மனைவிகளை கடும் சித்தரவதை செய்து வருகிறார்கள் இந்த ஆண்வர்க்கம். பெண் சிசுவைப் பெற்ற பெண்ணை வேதனைப்படுத்துவதில் தானும் ஒரு பெண் என்ற நினைவில்லாத மாமியாரும் சேர்ந்திருப்பது இன்றைய நவீன காலத்தின் சாதனையாகும். பெண் குழந்தை பெற்றதால் ஒரு தாய் வார்த்தையில் எழுதமுடியாத அளவிற்கு அன்றும் இன்றும் பல சங்கடத்திற்கு உள்ளாகிறாள்.

### அன்று பெண்குழந்தையின் நிலை:

ஒருவனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது என்ற சந்தோஷமான சுப செய்தி சொல்லப்படும் போது, தன்மீது இடிவிழுந்து தனது வாழ்க்கையே நாசமாகி விட்டது போன்ற பிரமை ஏற்பட்டு, பெண்ணைப் பெற்றுத்தந்த தனது மனைவியின் மீதுள்ள கோபத்தை விழுங்கிய நிலையில் செய்வதறியாது முகம் கருத்துப் போய்விடுகிறான். யாருக்கும் தெரியாமல் அந்த பெண் சிசுவை மண்ணுக்குள் புதைத்து விடுவதா? அல்லது காலம் முழுவதும் இழிவை சுமந்த நிலையில் அந்த குழந்தையை வளர்ப்பதா? என்ற வேதனையான யோசனையில் ஆழ்ந்து, தனக்கு நிவர்த்தி செய்யமுடியாத பேரிழப்பு ஏற்பட்டுவிட்டதாக நினைத்து கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகி மக்களின் பார்வையிலிருந்து மறைந்து வாழ்கிறான். அந்தளவு பெண் குழந்தை பிறப்பதை வெறுத்து வந்தார்கள் அன்றைய ஆண்வர்க்கத்தினர். இந்த தகவலை குர்ஆன் பின் வருமாறு எடுத்துரைக்கிறது.

**وَإِذَا بُشِّرَ أَحَدُهُمْ بِالْأُنْثَى ظَلَّ وَجْهُهُ مُسْوَدًّا وَهُوَ كَظِيمٌ يَتَوَارَى مِنَ الْقَوْمِ مِنْ سُوءِ مَا بُشِّرَ بِهِ أَيُمْسِكُهُ عَلَى هُونٍ أَمْ يَدُسُّهُ فِي التُّرَابِ أَلَا سَاءَ مَا يَحْكُمُونَ (النحل: 58,59)**

இன்னும் அவர்களில் ஒருவனுக்கு பெண் குழந்தை (பிறந்திருப்பது) கொண்டு நன்மாராயங் கூறப்பட்டால், கோபத்தை அடக்கி விழுங்கியவனாக அவன் இருக்க அவனுடைய முகம் (துக்கத்தால்) கருத்ததாக ஆகிவிடுகிறது.

எதனைக் கொண்டு நன்மாராயங் கூறப்பட்டானோ அதன் தீமையினால் இழிவுடன் அதை வைத்துக் கொள்வதா? அல்லது அதை மண்ணில் புதைத்து விடுவதா? என்று (கவலைப்பட்டு, மக்கள் முன் வராமல்) சமூகத்தாரை விட்டும் மறைந்து கொள்கிறான். அவர்கள் செய்யும் தீர்மானம் மிகக் கெட்டது என்பதைத்

தெரிந்து கொள்ளுங்கள். அல் குர்ஆன்: 16: 58,59

பெண் குழந்தை பிறந்த இழிவைத்தாங்கிக் கொள்ள முடியாத அவர்கள், எந்தப் பாவமும், யாருக்கு எந்தத் தீமையும் செய்யாத அந்த குழந்தையை உயிருடன் மண்ணுக்குள் புதைத்துவந்தார்கள். உயிருக்குப் போராடும், கல் மனதையும் கரைய வைக்கும் தனது குழந்தையின் மரண ஓலத்தை கேட்டுக் கொண்டே இந்தக் கொடூரச் செயலை எவ்வாறு அவர்களால் செய்ய முடிந்தது.?

### பெண்ணுரிமை பேசப்படும் இன்று பெண்குழந்தையின் அவலம்:

அன்றைய அறியாமை காலத்தில் பெண்ணுரிமைச் சங்கம் இல்லை பெண் விடுதலை இயக்கம் நடத்தப்படவில்லை. அதனால் பெண்கள் உயிர் வாழும் உரிமை பறிக்கப்பட்டு, உயிருடன் புதைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆன்மா என்பது ஒன்று இருக்கிறதா? என்றெல்லாம் பேசப்பட்டுவந்த அறியாமைக்காலம் அது. ஆனால் பெண்ணுரிமைச் சங்கம், பெண்விடுதலை இயக்கம் எல்லாம் தோன்றி, பெண்ணுரிமைகளுக்காக? பல மாநாடுகளும், போராட்டங்களும் நடத்தி பெண்ணுரிமை, பெண் விடுதலை? என மூச்சுக்கு மூச்சு பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நவீன யுகத்தில் பெண்ணுரிமைகள் பாதுகாக்கப் படுகின்றனவா? அவர்களின் உயிருக்கும், உடமைக்கும், கற்புக்கும் பாதுகாப்பு உள்ளதா? அல்லது இந்த பெண்சிசுக் கொலைதான் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறதா?. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பதற்காகவே உருவாக்கப்பட்ட இந்த சங்கங்களின் காதுகளுக்கு இந்த செய்தி எட்டவில்லையா? பெண் சிசுக் கொலையை தடுத்து நிறுத்தி பெண்களுக்கு உயிர் வாழும் உரிமையை வாங்கித்தர ஏன் இந்த இயக்கங்கள் பாடுபட வில்லை. தஸ்லீமாவைப் போல் வேலிதாண்டியவர்களுக்கு வக்காலத்து வாங்கி களத்தில் இறங்கிய இயக்கங்கள் இந்தசிசுக் கொலை கொடுமையை கண்டிக்க முன்வரவில்லையே! ஏன்? இந்தக் கொடுமை தாங்கள் சார்ந்திருக்கும் இந்து மதமக்கள் மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேயா? அறியாமை காலத்தில் நடந்த முறையை விட மிகக் கொடூரமான முறையை பின்பற்றியல்லவா இன்று பெண் சிசுக்கள் கொல்லப்படுகிறது. அன்று ஆண்கள் தான் இந்த மன்னிக்கமுடியாத குற்றத்தை செய்தார்கள் என்றால் இன்றோ தனது மாமியார், கணவனின் தொல்லைகளுக்கு பயந்து, பாலூட்டி தாலாட்டி வளர்க்க வேண்டிய அன்புள்ள அன்னையே தனது கருணையான உள்ளத்தை கல்லாக்கி, துடிதுடித்து உயிரை விடப்போகும் தனது அன்புக் குழந்தையைக் காண தைரியம் இல்லாமல் தனது இருக்கண்களையும் இறுக மூடிக் கொண்டு, அரவணைக்க வேண்டிய அன்புக் கரங்களாலேயே கள்ளிப்பாலை ஊற்றி சாகடிக்கும் கொடுமையான நிகழ்வுகள் அல்லவா அன்றாட செய்தியாக மாறிவிட்டது. தனது அன்புத் தாய் தனது பசியை போக்க தனக்கு அமுதூட்டுகிறாள் என்று கருதி நாக்கை வளைத்து, சுழித்து சப்பைக் கொட்டி, சுவைத்து கள்ளிப்பாலை அருந்தும் அந்த குழந்தைக்கு இது கள்ளிப்பால், நீ துடிதுடிக்க உனது உயிரைக் குடிக்கப்போகும் பால், உனது பசியை நீக்க அல்ல, அழுகிய இருதயம் பெற்ற மனிதர்கள் வாழும் இந்த உலகத்திலிருந்தே உன்னை நீக்கப்போகும் பால் என்பதை எடுத்துச் சொல்தவற்குக்கூட அப்போது யாருமில்லையே.

பெரியவர்களே உண்பதற்கு முடியாத உம்மியுடன் கூடிய நெல்லை அந்த சிசுவின் சிறிய வாயில் திணித்து கொல்லப்படும் கொடூரமான முறையையும் தமிழகத்தின் சில பகுதிகளில் கடைபிடித்து வருவதை எழுதுவதற்கே வெட்கமாக இருக்கிறது. வேதனையால் பேனா முனை எழுத மறுக்கிறது. இந்தளவிற்கு கொடூரமான வழிமுறையை பின்பற்றி கொல்லப்படும் அளவிற்கு அந்த சிசு என்ன மன்னிக்கமுடியாத பாவம் செய்தது?. பெண்ணாக பிறந்தது அந்த சிசுவின் குற்றமா? அல்லது அதனைப் பெண்ணாகப் பெற்ற தாய் குற்றத்திற்காக அந்த சிசு தண்டிக்கப்படுகிறதா? பெண்ணாக பிறப்பதற்கு யார் காரணம்? ஆண் மகன் நீ அல்லவா? யோசனை செய்து பார்.

இந்த கொடூரத்தை நிறுத்துவதற்கு உருப்படியான திட்டத்தை வகுத்து அதனை செயல்படுத்தி, இந்த ஈனச்செயலை நிறுத்த முடிந்ததா இந்த பெண்ணுரிமை இயக்கங்களால்?. தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட தொட்டில் குழந்தை திட்டம் அந்த பெண் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக ஆக்கி இருப்பதுடன், அந்தப் பெண் வளர்ந்து புரிந்து கொள்ளும் பருவம் அடைந்தப்பின் தாய், தந்தை அறியாத தனக்கு ஏற்பட்டுள்ள இந்த அவமான நிலையை நினைத்து மனமுடைந்து தற்கொலை செய்து கொள்வதற்கல்லவா இந்தத் திட்டம் வழிவகுத்துள்ளது. இதனால் சிசுக் கொலை குறைந்துள்ளதா? இல்லையே! கற்பனைக்கெட்டாத அளவிற்கு பல சமுதாயப்பிரச்சனைகள் தோன்றுவதற்கு இந்த திட்டம் காரணமாக ஆகிவிட்டது.

என்ன குற்றத்திற்காக இந்த சிசு கொடூரமாக கொல்லப்பட்டது என மறுமை நாளில் இந்த குழந்தை பற்றி விசாரிக்கப்படும் என்பது உணர்த்தப்படாத வரை, வேறு எந்த வழிமுறையினாலும் இந்த குற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. மறுமை நாள் விசாரணையில் மாட்டிக் கொள்வோம் என்று இந்த சமுதாய மக்கள் புரிய ஆரம்பித்துவிட்டால் அவர்களிடையே இந்த குற்றம் அறவே இல்லாமல் ஆகிவிடும். அன்று குர்ஆன் உருவாக்கிய மிகப்பெரிய இஸ்லாமிய சமுதாயம் அதற்கு மிகச் சரியானதொரு எடுத்துக்காட்டாக இன்றும் திகழ்கிறது.

وَإِذَا الْمَوْءُودَةُ سُئِلَتْ بِأَيِّ ذَنْبٍ قُتِلَتْ (التكوير:8,9)

என்ன குற்றத்திற்காக அவள் கொல்லப்பட்டாள் என்று உயிருடன் புதைக்கப்பட்ட பெண்பிள்ளை வினவப்படும் போது.... அல் குர்ஆன்: 81: 8,9.

இந்த இறைவசனம் இறக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை முஸ்லிம் சமூகம் எவ்வளவு பெரிய வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்ந்து கொண்டிருந்தாலும், இந்த கொடூரத்தைச் செய்வதற்கு முன்வர மாட்டார்கள். உதாரணத்திற்குக் கூட முஸ்லிம் சமூகத்திடம் ஒரு நிகழ்வினை காண முடியாது. அறியாமையால் ஒரு காலத்தில் அந்தக் குற்றத்தைச் செய்து வந்த மக்களும் இந்த வசனத்தை அருளிய அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட பின் முற்றிலுமாக மாறி, தான் செய்த அந்த குற்றத்திற்காக அவனிடம் மன்றாடி மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

*அர்ஷின் கீழ் ... முதல் பக்கத் தொடர்ச்சி ...*

அவர்களின் வேர்வை அவர்கள் காதுவரை மூடிவிடும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

தன் வாழ்நாளை எப்படி கழித்தார், தான் கற்ற அறிவைக் கொண்டு என்ன செய்தார், தன் பணத்தை எங்கிரிந்து சம்பாதித்தார் இன்னும் எப்படி செலவளித்தார், தன் உடம்பை எதில் அற்பணித்தார் என்ற, நான்கு கேள்விகள் கேட்கப்படும் வரை நாளை மறுமையில் ஒரு அடியானின் இரு கால் பாதங்களும் (அவர் நிற்கும் இடத்தை விட்டும்) நகராது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.(திர்மிதி)

இவ்வளவு இக்கட்டான சூழலில்தான் ஏழு கூட்டத்திற்கு மட்டும் தன் அர்ஷின் நிழலில் அல்லாஹ் நிழல் கொடுப்பான், அக்கூட்டத்தின் தன்மைகளை கொஞ்சம் விரிவாக பார்ப்போம்.

### 1. நீதியான அரசன்:

**அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:**

**நம்பி உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம் நீங்கள் ஒப்புவித்து விடவேண்டுமென்றும், மனிதர்களிடையே தீர்ப்பு கூறினால் நியாயமாகவே தீர்ப்புக் கூறுதல் வேண்டும் என்றும் உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ் கட்டளையிடுகிறான்;. நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு (இதில்) மிகவும் சிறந்த உபதேசம் செய்கிறான்;. நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியுறுவோனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கின்றான்.** 4:58.

மக்கா வெற்றிபெற்ற போது உத்மான் இப்னு மள்ஊன் (ரலி) அவர்களிடம் இருந்த கஃபத்துல்லாவின் சாவியை நபி (ஸல்) அவர்கள், அவர்களிடமிருந்து எடுத்திருந்தார்கள், கஃபத்துல்லாவிலிருந்து வெளியில் வரும் போது மேல்கூறப்பட்ட ஆயத்தை ஓதியவாறு உத்மான் இப்னு மள்ஊன் (ரலி) அவர்களை அழைத்து அச்சாவியை அவர்களிடமே ஒப்படைத்து விட்டார்கள். இந்த ஆயத்திலே அல்லாஹ் அமானிதங்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கினால் நீதமான முறையில் தீர்ப்பு வழங்குமாறும் நபி (ஸல்) அவர்களுக்கு கட்டளையிடுகின்றான்.

**நீதமென்பது:** தனக்கு சாதகமாக இருந்தாலும் பாதகமாக இருந்தாலும் நீதி தவறக்கூடாது, தீர்ப்பு வழங்குபவர் ஆண்டியாக இருந்தாலும் சரி அரசனாக இருந்தாலும் சரியே, நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீதில் நீதியான அரசன் என்று கூறியதற்கு காரணம், அரசனாக இருந்தும் நீதி தவறாமல் இருப்பது ஈமானின் முழுமைக்கு அடையாளமாகும் என்பதற்காகத்தான், குறைவான ஈமான் உள்ளவர் அரச பதவியில் இருக்கும் போது நீதியாக தீர்ப்பளிக்கமாட்டார் இன்றைய உலகத்தின் நடைமுறைகள் அதற்கு சான்றாக இருக்கின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், தனது தீர்ப்பிலும் தனது குடும்பத்திலும் அவர்கள் பொறுப்பேற்றவைகளிலும் அல்லாஹ்விடத்தில் நீதம் செலுத்துபவர்கள் கண்ணியத்திற்குரிய அர்ரஹ்மானின் வலது புறத்திலிருக்கும் ஒளியிலான மிம்பர் மேடையில் வீற்றிருப்பார்கள், அல்லாஹ்வின் இரு கரங்களும் வலதுபுறத்திலுள்ளவையாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

### 2. அல்லாஹ்வின் வணக்கவழிபாட்டில் உருவான வாலிபன்.

வாலிப வயது என்பது, மனிதன் தன் வாழ்வில் பெறும் மிக முக்கிய கட்டமாகும். அந்த வயதில் மனிதன் சகல உடல் ஆரோக்கியத்தையும் பெற்று கம்பீரமாக வாழும் வயதாகும். அந்த வயதில்தான் மனிதனின் உடல் நல்ல ஆரோக்கியத்தை பெற்று சுறுசுறுப்பாக வாழும் வயதாகும். எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவாகும் வயதாகும். அதுவும் இந்த காலத்தைப்பற்றி கூறத்தேவையில்லை. இப்படிப்பட்ட பல எண்ணங்கள் உருவாகும் வயதிலும் அல்லாஹ்வைக்கு அடிபணிந்து நடக்கும் வாலிபனும் அந்த அர்ஷின் நிழலில் வீற்றிருப்பான். தங்களின் ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்காக குகைக்கு சென்ற வாலிபர்களை பற்றி அல்லாஹ் திருமறையில் புகழ்ந்து கூறுகின்றான்.

**(அஸ்ஹாபுல் கஹ்ஃபு என்ற குகையிலிருந்தோரைப் பற்றி) அந்த குகையிலிருந்தோரும், சாஸனத்தையுடையோரும் நம்முடைய ஆச்சரியமான அத்தாட்சிகளில் நின்றும் உள்ளவர்கள் என எண்ணுகிறாரோ, அந்த இளைஞர்கள் குகையினுள் தஞ்சம் புகுந்த போது அவர்கள் "எங்கள் இறைவா! நீ உன்னிடமிருந்து எங்களுக்கு ரஹ்மத்தை அருள்வாயாக! இன்னும் நீ எங்களுக்கு எங்கள் காரியத்தை(ப் பலனுள்ள தாக)ச் சீர்திருத்தித் தருவாயாக!" என்று கூறினார்கள். ஆகவே நாம் அவர்களை எண்ணப்பட்ட பல ஆண்டுகள் வரை அக்குகையில் (தூங்குமாறு) அவர்களுடைய காதுகளின் மீது (திரையிட்டுத்) தடையேற்படுத்தினோம். பின்பு, (அக்குகையில் தங்கியிருந்த) இருபிரிவினர்களில் எப்பிரிவினர், தாங்கள் (குகையில்) தங்கியிருந்த கால அளவை நன்கு அறிந்திருந்தார்கள் என்பதைச் சோதிப்பதற்காக அவர்களை நாம் எழுப்பினோம். (நபியே!) நாம் உமக்கு அவர்களுடைய வரலாற்றை உண்மையைக் கொண்டு அறிவிக்கிறோம்; நிச்சயமாக அவர்கள் இளைஞர்கள் - தங்கள் இறைவன் மீது ஈமான் கொண்டார்கள்; இன்னும் நாம் அவர்களை நேர் வழியில் அதிகப்படுத்தினோம்.** 18:9-13

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து கூறினார்கள். ஐந்துக்கு முன் ஐந்தை பயன்படுத்தி கொள்ளுங்கள், உன்னுடைய வயோதிபத்துக்கு முன் உன் வாலிபத்தையும், நீ வேலையுள்ளவராக ஆகுவதற்கு முன் உன் ஓய்வையும், உன்னுடைய மரணத்திற்க்கு முன் உன் வாழ்வையும், உன்னுடைய நோய்க்கு முன் உன் ஆரோக்கியத்தையும், உன்னுடைய வறுமைக்கு முன் உன்னுடைய செல்வத்தையும் (மறுமைக்காக) பயன்படுத்திக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்தத்ரகுல் ஹாகிம்) இந்த ஹதீதிலும் வாலிபம் இடம் பெற்றிருப்பது வாலிப வயதின் முக்கியத்துவத்தை காட்டுகின்றது.

### 3 பள்ளியோடு நெருங்கிய தொடர்புடைய மனிதர்

பள்ளிக்குள் இருப்பதில் அமைதி பெறுபவர் ஒரு உண்மையான முஃமின். மனிதன் என்பவன் உலகத்தேவைகள் உள்ளவன், அவனுக்கு குடும்பம் என்றும் தொழில் என்றும் பல உலகத்தேவைகள்

இருக்கின்றது. பள்ளிக்குள்ளேயே தனது வாழ்நாளை கழிக்கமுடியாது என்பதால், பள்ளிக்குள் வந்த அந்த மனிதன் தனது உலக வாழ்க்கைத் தேவைக்காக வெளியில் செல்லத்தான் வேண்டும். பள்ளியிலிருந்து வெளியில் சென்றதும் மீண்டும் பள்ளிக்குள் வந்து அந்த ஈமானிய அமைதியை எப்போது பெறுவதென்றே எண்ணிக் கொண்டிருப்பார். தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீன் மீண்டும் தண்ணீருக்குள் செல்வதற்கு துடிப்பது போல், பள்ளியிலிருந்து உலகத் தேவைக்காக வெளியில் சென்ற முஃமின் மீண்டும் பள்ளிக்குள் வருவதற்கு ஆசைப்படுவான். இது ஒரு உண்மையான முஃமினைத்தவிர வேறு யாரிடமும் இருக்க முடியாது. உண்மையான முஃமின் அல்லாதவர், கூட்டில் அடைக்கப்பட்ட பறவை போன்று பள்ளிக்குள் இருப்பார், கூட்டில் அடைக்கப்பட்ட பறவை, தன்னை எப்போது திறந்து விடுவார்கள், பறந்து விடலாம் என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கும். அவ்வாறே உண்மையான முஃமின் அல்லாதவரும் பள்ளிக்குள் தொழுகைக்கு வந்ததும், இமாம் சின்ன சூரா ஓதமாட்டாரா என்று நினைப்பதும், எப்போது ஸலாம் கொடுத்து தொழுகையை முடிப்பார் என்று எதிர்பார்த்திரிந்து இமாம் தொழுகையை முடித்ததும், பள்ளிக்குள் ஏதோ விபத்து நடந்து விட்டது போன்று அவசர அவசரமாக பள்ளியை விட்டும் வெளியேறிச் சென்றுவிடுவார்கள்.

இன்ஷாஅல்லாஹ் தொடரும்

## உங்களுக்குத் தெரியுமா?

1. பூமி தன்னைத் தானே முழுமையாக சுற்றி முடிப்பதற்கு 24 மணி நேரங்கள் ஆகும். ஆனால் ஜுபிடர் (Jupiter) தன்னைத் தானே சுற்றி வருவதற்கு 5 நாட்களும், 10 மணி நேரங்களும் எடுத்துக் கொள்ளும்.

2. பூமி சூரியனை சுற்றி முழுமையாக முடிப்பதற்கு 365 நாட்கள் அதாவது ஒரு வருடம் எடுத்துக் கொள்ளும். புளூட்டோ (Pluto) சூரியனை சுற்றி வருவதற்கு 240 ஆண்டுகள் ஆகிவிடும்.

# Microsoft Excel - ன் பயன்களை தெரிந்துக் கொள்வோம்

**கேள்வி:** ஒரு எக்செல் செல்லில் டேட்டாவை நிரப்பி என்டர் கீயை அழுத்தியவுடன், நமக்குத் தேவைப்பட்ட வேறொரு செல்லுக்கு செல்ல முடியுமா? (எடுத்துக் காட்டாக A5 செல்லில் டேட்டாவை டைப் செய்து என்டர் கொடுத்தவுடன் C15 செல்லுக்கு செல்ல வேண்டும்).

**பதில்:** முடியும். எந்தெந்த செல்களில் டேட்டாவை நிரப்பப் போகிறீர்களோ அவற்றை எல்லாம் முதலில் தேர்வு செய்யுங்கள். உங்கள் எடுத்துக் காட்டின்படி கன்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு A5, C15... என செல்களைத் தேர்வு செய்யுங்கள். பின்பு Format=>Cells=>Protection கட்டளையை கொடுங்கள். Locked என்ற செக் பாக்ஸில் உள்ள டிக் அடையாளத்தை நீக்கி விட்டு ஓகே செய்யுங்கள். இறுதியில் Tools=>Protection=>Protect Sheet கட்டளையை கொடுத்து ஓகே பட்டனை அழுத்துங்கள். A5 செல்லில் டைப் செய்யுங்கள். டேப் (Tab) கீயை அழுத்துங்கள். C15 செல்லுக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்.

**கேள்வி:** எக்செல் செல்லில் உள்ள ஒரு சில எழுத்துக்களை/எண்களை மட்டும் தேர்வு செய்து அவற்றை போல்ட் (Bold), இடாலிக் (Italic) போன்ற எஃபெக்டுகளை அல்லது வண்ணத்தை கொடுக்க முடிகிறது. அப்படிப்பட்ட செல்லுகளை Concatenate ஃபங்சன் மூலம் இணைத்தால் அதில் எஃபெக்ட் எல்லாம் நீங்கி விடுகிறது. இணைந்த டெக்ஸ்ட்டில் உள்ள ஒரு சில எழுத்துக்களை/ எண்களை மட்டும் தேர்வு செய்து எஃபெக்டும் கொடுக்க முடியவில்லை. ஏன்?

**பதில்:** உங்கள் கேள்வியை மற்றவர்களுக்கு விளக்குவோம். A1 செல்லில் India is என்ற சொற்களும், A2 செல்லில் Our Country என்ற சொற்களும் இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். இவற்றுள் India மற்றும் Country ஆகிய இரு சொற்கள் போல்டாக இருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். A3 செல்லில் Concatenate (A1, A2) என்ற ஃபார்முலாவை கொடுங்கள். அங்கு India is our country என்ற வாக்கியம் தெரியும். ஆனால் அதில் India மற்றும் Country ஆகிய சொற்கள் போல்டாய் இல்லாமல் சாதாரணமாகத் தெரியும். அவை போல்டாகவே இருக்கும்படி செய்ய முடியாதா என்பதும், அந்த இரு சொற்களை மட்டும் தேர்வு செய்ய முடியாதா என்பதும்தான் உங்கள் கேள்வி. முடியாது என்பதுதான் விடை. A3 செல்லில் உள்ள ஃபார்முலாவை மதிப்பாக மாற்றிய பின்பு வேண்டியவற்றை தேர்வு செய்து போல்டாக மாற்ற முடியும். A3 செல்லை கிளிக் செய்து Edit=>Copy கட்டளை கொடுங்கள். பின்பு Edit=>Paste Special கட்டளை கொடுத்து, Values என்பதைத் தேர்வு செய்து ஓகே செய்யுங்கள். இனிமேல் உங்கள் விருப்பப்படி ஃபார்மட் செய்து கொள்ளுங்கள்.

**கேள்வி:** A1 செல்லில் நான் டைப் செய்துள்ள டேட்டா, F1 செல்லுகள் வரை நீண்டு மீதமுள்ளவை அடுத்த வரியில் வரும்படி மடக்கி விட வேண்டும். முடியுமா?

**பதில்:** முடியும். A1:F1 ரேஞ்சைத் தேர்வு செய்யுங்கள். Edit=>Fill=>Justify கட்டளையை கொடுங்கள்.

**கேள்வி:** எக்செலில் Subtotals கண்டுபிடித்தேன். இதன் Summary மட்டும் எனக்கு போதுமாதலால் அதை மட்டும் காப்பி செய்து வேறொரு இடத்தில் பேஸ்ட் செய்தேன். ஆனால் மறைந்துள்ள வரிசைகளும் சேர்ந்து பேஸ்ட் ஆகிறது. வெறும் சம்மரியை மட்டும் காப்பிபேஸ்ட் செய்ய முடியாதா?

**பதில்:** மறைந்துள்ள வரிசைகளை விட்டு விட்டு, கண்களுக்கு தெரிகின்ற செல்லுகளை மட்டும் தேர்வு செய்யும்படி எக்செலுக்கு கூறினால் சரியாகி விடும். டேட்டா உள்ள பகுதியில் உள்ள ஏதாவது செல்லை கிளிக் செய்யுங்கள். பின்பு Ctrl+(asterisk) கீகளை அழுத்துங்கள். இப்பொழுது எல்லா செல்லுகளும் தேர்வாகி விடும்.கண்களுக்கு தெரிகின்ற செல்லுகளைத் தேர்வு செய்ய alt+; (semicolon) கீகளை அழுத்துங்கள் அல்லது F5 கீயை அழுத்திவிட்டு, Special என்பதை கிளிக் செய்து பின்பு Visible cells Only என்பதை கிளிக் செய்து ஓகே செய்யுங்கள். இனிமேல் காப்பி அண்டு பேஸ்ட் செய்து பாருங்கள்.

# இஸ்லாமிய பல்சுவை நிகழ்ச்சி

**இடம்:** அல்ஷரஃப் இஸ்திராஹா, மதீனா ரோடு,
மஹத்தா ரெஹிலி பின்புறம் (பார்க்க: வரைபடம்)
**நேரம்:** மாலை 6 மணியிலிருந்து இரவு 12 மணிவரை
**நாள்:** 20-04-1430 ஹிஜ்ரி (16-04-2009), வியாழக்கிழமை

## நிகழ்ச்சிகள்:

வினாடி-வினா, விளையாட்டு, கருத்தரங்கு, சிறப்புரைகள்,
தொழுகை-செயல்முறை விளக்கம், பரிசளிப்பு

## அழைப்பாளர்கள்:

### மௌலவி மஃப்ரூஃம் பஹ்ஜி
இஸ்லாமிய அழைப்பாளர், ரியாத்

### ஷெய்க்: அபு முஸ்அப் வஜ்தி பின் அஹ்மத் அல்அக்காரி
Director of English Dept. Jeddah Dawah Center (Hay Assalaama), Jeddah

### மௌலவி ஸியாத் மக்கி
இஸ்லாமிய அழைப்பாளர், மக்கா

### மௌலவி அஹ்மத் பாக்கவி
இஸ்லாமிய அழைப்பாளர், யான்பு

### மௌலவி இப்றாஹீம் மதனி
இஸ்லாமிய அழைப்பாளர், ஜித்தா

**மேலதிக விபரங்களுக்கு மற்றும் முன்பதிவிற்கு**

மௌலவி இப்றாஹீம் மதனி (0506625229), சகோ. அபுல் அமான் (0544753212)
சகோ. அப்துஸ்ஸத்தார் (0509392353), சகோ. யஹ்யா (0506674546), சகோ. ஹாஜா (0506096740)




**நிகழ்ச்சி ஏற்பாடு:**
ஸனாயிய்யா இஸ்லாமிய அழைப்பகம்
மற்றும் தமிழ் தஃவா கமிட்டி, ஜித்தா

பெண்களுக்கான தனி இட வசதி மற்றும் இரவு உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Instant Prizes for kids' will start from 6pm

# மறுமை

"மறுமை நாளில் அவர்கள் வெளிப்பட்டு வருவார்கள். அவர்களுடைய எந்த விஷயமும் அல்லாஹ்வுக்கும் மறைந்ததாக இருக்காது, அந்நாளில் ஆட்சி யாருக்கு உரியதாக இருக்கும்? ஏகனாகிய, அடக்கியாளும் வல்லமை மிக்க அல்லாஹ்வுக்கேயாகும்".

"இவ்வுலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை, இன்னும் நிச்சயமாக மறுமைக்குரிய வீடு திடமாகவே அதுவே (நித்தியமான) வாழ்வாகும்".

(அல்லாஹ்) அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். அவனே நியாயத்தீர்ப்பு நாளின் அதிபதி ஆவான். (1:2,3)

நீங்கள் மண்ணறைகளை சந்திக்கும் வரை செல்வத்தை பெருக்கும் பேராசை உங்களை அல்லாஹ்வை விட்டும் உங்களை பராமுகமாக்கி விட்டது. (102 : 1,2)

நபி(ஸல்) அவர்கள் மிம்பரின் மீது அமர நாங்களும் அவர்களைச் சுற்றி அமர்ந்தோம், அப்போது ரஸூல்(ஸல்) அவர்கள், "எனக்கு பின் உலக சுகபோகங்கள் உங்களுக்குப் பெருகிவிடுவது நான் உங்களிடம் பயப்படும் விஷயங்களில் ஒன்றாகும் என்று கூறினார்கள்" என அபூஸயீத்(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்)

"யாஅல்லாஹ்! மறுமை வாழ்வைத் தவிர வேறு வாழ்க்கை(நிரந்தரமானதாகவும், இன்பமயமானதாகவும்) இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்)

இறந்து போன மய்யித்தை (1) அவரது குடும்பம் (2) அவரது செல்வம் (3) அவரது நற்செயல்களும் தீய செயல்களும் ஆகிய மூன்றும் தொடர்ந்து செல்கின்றது. அவர் அடக்கப்பட்டவுடன் அவற்றில் இரண்டு திரும்பி வந்துவிடும், ஒன்று அவருடனே இருக்கும். அவரது குடும்பத்தாரும் அவரின் செல்வமும் திரும்பிவிடும். அவரின் நல்ல, தீய செயல்கள் மட்டும் அவருடன் இருக்கும். (எனவே நற்செயல்களையே செய்யுங்கள்) என்று ரஸூல்(ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ்(ரலி) அறிவிக்கிறார். (புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ், பூமியைக் கைப்பிடியில் அடக்கி, வலது கையால் வானங்களைச் சுருட்டிக் கொண்டு, "நான் தான் பேரரசன்! பூமியில் அரசர்களாகயிருந்தோர் எங்கே? என்று கேட்பான்", என ரஸூல்(ஸல்) அவர்கள் சொல்லக் கேட்டதாக அபூஹுரைரா(ரலி) அவர்கள் கூறினார்கள். (புகாரி)

கண்ணியத்திற்குறிய அல்லாஹ் மறுமை நாளில் வானங்களைச் சுருட்டி தனது வலது கையில் வைத்துக் கொண்டு, "நானே பேரரசன், எங்கே (உலகில்) அடக்கியாண்டவர்கள்?, எங்கே அந்தப் பெருமைக்காரர்கள்?" எனக் கூறுவான், பின்பு பூமியை தனது இடது கையில் சுருட்டி "நானே அரசன்! எங்கே அடக்கியாண்டவர்கள்?, எங்கே பெருமைக் காரர்கள்? என்று கூறுவான்" என ரஸூல்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு உமர்(ரலி): புகாரி, முஸ்லிம், அபூதாவூத்)

# மீன்கள்

மீன்கள் இந்தியாவில் சில இடங்களில் சைவ உணவாகவே கருதப்படுகின்றது. மீன்களில் புரதச்சத்து மட்டுமன்றி கால்சியமும் மிகுதியாய் உள்ளது. மீன்களின் வகைகளைப் பொறுத்து அவற்றில் அடங்கியுள்ள சத்துக்களும் வித்தியாசப்படுகின்றன. கெண்டை மீன்களில் ஆட்டிறைச்சியில் உள்ளது போல் இருமடங்கு கொழுப்பு சத்து உள்ளது. கெலங்கா போன்ற மீன்களில் கொழுப்பு மிகவும் குறைவு. மீன் இறைச்சி உடல் சூட்டை உண்டாக்குவது இல்லை. கடல் உணவுகளில் பெரிதாக கலப்படம் செய்ய வாய்ப்பில்லை என்பதால் அனைத்து தரப்பினரும் கவலை இன்றி சாப்பிட மீன் இறைச்சி ஒரு சிறந்த உணவு.

ஒவ்வொரு மீனுக்கும் சத்துக்கள் விபரம் வித்தியாசப்படுவதால், பொதுவாக மீன்களுக்கு என்று கொடுப்பது கடினம். அதிகம் உணவாகும் வெளவால் மீனின் சத்துக்கள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



**100 கிராம் வெள்ளை வெளவால் (POPLET) மீனில் அடங்கியுள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| சக்தி (Energy) | 87 கலோரிகள் |
| ஈரப்பதம்:நீர் (Moisture) | 78.4 கிராம் |
| புரதம் (Protein) | 17 கிராம் |
| தாதுக்கள் | 1.5 கிராம் |
| கொழுப்பு (Fat) | 1.3 கிராம் |
| கால்சியம் (Calcium) | 200 மி.கி |
| பாஸ்பரஸ் (Phosporous) | 290 மி.கி |
| இரும்பு (Iron) | 0.9 மி.கி |
| நியாசின் (Niacin) | 2.6 மி.கி |
| ரைப்போஃப்ளேவின் (Riboflavin) | 0.15 மி.கி |

Source national institute of nutrition – Hyderabad

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:7

## போட்டிக்குரிய கேள்விகள்

1. சமீபத்தில் புதிதாக உருவாகிய திருப்பூர் மாவட்டம் தமிழகத்தின் எத்தனையாவது மாவட்டமாகும்.
   a. 32வது மாவட்டமாகும்
   b. 31வது மாவட்டமாகும்
   c. 30வது மாவட்டமாகும்
2. சுவனத்திலிருந்து ஓடக்கூடிய நதிகளில் ஒன்று?
   a. காவேரி நதி b. யமுனா நதி
   c. நைல் நதி
3. பூமியில் அல்லாஹ்விற்கு மிகப்பிரியமான இடம் எது?
   a. மஸ்ஜித் b. கடைவீதி
   c. திருவிழா நடைபெறும் இடம்
4. வருகிற மே மாதம் நடைபெறும் இந்தியாவின் நாடாளுமன்ற தேர்தலுடன் இந்த மாநிலத்திற்கு சட்டமன்ற தேர்தலும் நடைபெறுகிறது
   a. தமிழகம் b. கேரளா
   c. ஆந்திர பிரதேஷம்
5. மர்யமின் மகன் ஈஸா(அலை) அவர்களை அவர்களின் சமுதாயம் எல்லை கடந்து உயர்த்தியது போன்று என்னையும் எல்லை கடந்து உயர்த்தாதீர்கள் என்று கூறிய நபி யார்?
   a. நபி(ஸல்) b. மூஸா(அலை)
   c. இப்றாஹீம்(அலை)

அறிவுப் போட்டி - 5:6 க்கான பரிசு பெறுபவர் : முஹம்மது சபீர் (0509776519)

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 5:6 க்கான விடைகள்

1. c. 31: 13
2. b. 7வது பிரதமர்
3. c. நரகத்தில்
4. c. நபி(ஸல்) அவர்கள்
5. b. 7 வாசல்கள்

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 23 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

### தவ்பா செய்பவரை அல்லாஹ் நேசிக்கின்றான்;

உங்களில் ஒருவர் வனாந்திரத்தில் காணாமல் போய்விட்ட தம் ஒட்டகையின் மீது விழுவாரேயானால் (அதனை அவர் பெற்றுக் கொள்வாரேயானால்) அப்பொழுது அவர் அடைகிற மகிழ்ச்சியைவிட (பன் மடங்கு) அதிகமாக தன் அடியான் தன்னிடம் தவ்பாச் செய்து மீளும் பொழுது அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரி, முஸ்லிம் : அபூஹம்ஸா அனஸ் பின் மாலிக் அல் அன்ஸாரி(ரலி)

உங்களில் ஒருவரது வாகனம் அதில்தான் அவருடைய உணவும், குடிநீரும் உள்ளது. அது காணாமல் போய் அவர் ஆதரவிழந்தவராக, ஒரு மரத்தின் நிழலில் நின்று கொண்டிருக்கும் பொழுது, அவ்வாகனம் அவர் முன் திடீரெனத் தோன்றினால் அவர் எவ்வளவு மகிழ்ச்சியடைவாரோ, அதைவிட (பன்மடங்கு) அதிகமாக தன் அடியான் தன்னிடம் தவ்பாச் செய்து மீளும் பொழுது அல்லாஹ் மகிழ்ச்சியடைகிறான். அவர் தம் வாகனத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு மாபெரும் மகிழ்ச்சியில் திளைத்தவராக, 'இறைவா! நீ என் அடிமை நான் உன் எஜமானன்' என்று கூறிவிடுகிறார். அதிக மகிழ்ச்சியில் திளைத்ததால் நாவு தடுமாறி இவ்வாறு தவறாகக் கூறிவிடுகிறார். (இம்மனிதனின் மாபெரும் மகிழ்ச்சியை விட மிக அதிகமாக தன் அடியான் தவ்பாச் செய்யும் போது அல்லாஹுதஆலா மகிழ்ச்சியடைகிறான்). என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்: அனஸ்(ரலி)